ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

දේශීය මෙහෙයුම් කටයුතු දෙපාර්තමේන්තුව
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
Domestic Operations Department

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல : 35/01/005/0007/17**

2020 யூன் 17

**அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்**

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

திருத்தப்பட்டவாறான நாணய விதிச்சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) 10(உ), 93, 94 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட அறிவித்தல் மற்றும் திருத்தப்பட்டவாறான 2013 ஏப்பிறல் 12இன் 1805/39 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட **ஒழுங்குவிதி 'ஈ'** மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் சொல்லப்பட்ட அறிவித்தலுக்கிணங்க, இலங்கை ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புகளுக்கெதிராக அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தின் **இரண்டு சதவீதத்திற்கு (2.00%) சமமான** தொகையினை ஒதுக்குகளாக அவர்கள் பேண வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

3. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், 2013 ஏப்பிறல் 22இன் 35/01/005/0007/06ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 5ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட சராசரி வைப்புப் பொறுப்புகளின் இரண்டு சதவீதத்திற்கு மேலதிகமான தொகையொன்றினை இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகள் வடிவில் பேணலாம். எவ்வாறாயினும், நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளின் மேலதிகமான இரண்டு சதவீதத்தின் ஒரு சதவீதம் மாத்திரம் அதன் ஒதுக்குகளின் பாகமொன்றாக கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும். நாணயத் தாள்களினதும் குற்றிகளினதும் அத்தகைய தொகையானது தொடர்புடைய கணிப்பீட்டுக் காலப்பகுதிக்காக கணிப்பிடப்பட்ட இலங்கை நாணயத் தாள்களின் மற்றும் குற்றிகளின் வைத்திருக்கின்ற சராசரியாக இருத்தல் வேண்டும்.

4. 2020 மாச்சு 17இன் 35/01/005/0007/15 ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் அட்டவணை அ இணைக்கப்பட்டுள்ள "அட்டவணை அ" இன் மூலம் பதிலீடு செய்யப்படுகிறது.

5. மேற்குறித்த திருத்தமானது 2020 யூன் 16ஆம் திகதியில் இருந்து தொடங்குகின்ற நடைமுறை ஒதுக்கு காலப்பகுதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும். காலத்திற்கு காலம் திருத்தப்பட்டவாறான 2013 ஏப்பிறல் 22இன் 35/01/005/0007/06ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடையதாக இருக்கும்.

சீ ஏ அபேசிங்க
பணிப்பாளர்/ உள்நாட்டு தொழிற்பாடுகள்

7 වන මහල, 2 වන කුළුණ
අංක 30, ජනාධිපති මාවත
තැ.පෙ. 590, කොළඹ 01, ශ්‍රී ලංකාව

தளம் 7,கோபுரம் 2
இல. 30,சனாதிபதிமாவத்தை
த.பெ 590,கொழும்பு 01, இலங்கை

Level 7, Tower 2
No. 30, JanadhipathiMawata
P.O. Box 590. Colombo 01. Sri Lanka +94 112477036 +94112346287 ddod@cbsl.lk

## அட்டவணை அ

அறிக்கைப் படிவம்

நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்கள் அறிக்கை

**வங்கியின் பெயர் ..........................................................................................................................................**
**(..........................................) தொடக்கம் (..........................................) வரையான காலத்திற்கானது.**

திகதி திகதி

சேரல் : பணிப்பாளர்
உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புக்களின் சராசரித் தொகைகள் மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு வேலை நாள் முடிவிலும் வங்கியின் ஏடுகள் மூலம் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| (i)<br>கேள்வி<br>வைப்புக்கள் | (ii)<br>தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | (iii)<br>நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைகள்/ ஏற்றுக்கொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் | (iv)<br>அனைத்து ஏனைய வைப்புப் பொறுப்புக்கள்[1] |
|---|---|---|---|
| | | | |

[1] வைப்புச் சான்றிதழ் தொடர்பில் பிரகடனம் செய்யப்பட்ட தொகை செலுத்திய பெறுமதியாக இருக்க வேண்டும்.

**வேண்டப்படும் ஒதுக்குகள்**

.................................................... ஆரம்பிக்கின்ற காலப்பகுதிக்கானது

| விடயம் | இலங்கை ரூபாவில் |
|---|---|
| 1. அ. விடயத்திற்கு ஏற்றவாறு<br><br>(i)'மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/20 ஆம் இலக்க சுற்றறிக்கை அல்லது<br><br>(ii)'மோட்டார் வாகனங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கெதிரான எல்லைத் தேவைப்பாடுகள்' மீதான 2018 செத்தெம்பர் 29ஆம் திகதியிடப்பட்ட 35/01/005/0010/21 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட நாணயக் கடிதங்கள்<br><br>அத்துடன்<br><br>ஆ. 2018 ஒத்தோபர் 11ஆம் திகதியிடப்பட்ட 2018இன் 2ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட ஏற்றுகொள்ளலுக்கெதிரான ஆவணங்கள் நியதிகள் மீதான இறக்குமதி<br><br>இதற்கெதிரான சராசரி நாளாந்த மொத்த எல்லைகளின் 100 சதவீதம். | |
| 2. மேலே (1) நீங்கலாக சராசரி நாளாந்த மொத்த ரூபா வைப்புப் பொறுப்புகளின் 2 சதவீதம். | |
| 3. 1 மற்றும் 2இல் உள்ளடக்கப்படும் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் மேலதிகமாக வைத்திருக்கப்படும் இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளின் 2 சதவீதம், ஆயினும் 3 சதவீதத்தினை விஞ்சாதிருத்தல். | |
| 4. ஒதுக்குப் பேணுதல் காலத்தின் (1+2-3) மீது பேணப்படுவதற்கு வேண்டப்படும் மொத்த ஒதுக்குகள். | |

மேற்குறித்த கூற்று சரியானதென்றும் இவ்வங்கியிலுள்ள ஏடுகளுக்கமைவானதென்றும் மேலே காட்டப்பட்ட தொகைகள் இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவானவை என்றும் நாம்/நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்/ சான்றுப்படுத்துகின்றோம்.

திகதி :.............................. ..........................................................

உத்தியோகபூர்வ கையொப்பம்

**குறிப்பு -**

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர ஏதேனும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் மற்றும் இருப்புக்கள், குறித்துரைக்கப்பட்ட விகிதங்களில் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பேணுகையாக கணக்கிற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) அனைத்து தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்பட வேண்டும்.